மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.107/2019

வாக்குமூலம். பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிரஞ்சனா | ஜாதி | |
| க/பெ. | ஆத்மநாதன் (எ) குமார் | மதம் | |
| கிராமம் | | தொழில் | ஏகணிவயல் கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுகா | | வயது | 32/2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 23.08.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வாதி என்ன பரிகாரத்திற்காக வழக்கு தொடர்ந்துள்ளார் என்பது எனக்கு தெரியும். வாதி புலஎண்.199/4A ல் 1 ஏர்ஸ் பாதை எடுத்து கொடுக்க நானும் வட்டாட்சியரும் போயிருந்தோம். அதற்காக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறார். வாதி மொத்தம் 5 புல எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்து இருக்கிறார். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள புல எண்களுக்குகான நடப்பு கணக்கு விஸ்தீர்ணம் என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். 199/4A க்கான விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 1 ஏர்ஸ் விஸ்தீர்ணம். 199/4B 3 ஏர்ஸ் விஸ்தீர்ணம். புல எண்.199/4C 3 அரை ஏர்ஸ் விஸ்தீர்ணம். புலஎண்,199/4D 0.09.5 ஏர்ஸ் விஸ்தீர்ணம். 199/12 1 விஸ்தீர்ணம் 1 ஏர்ஸ் ஆகும். மேற்படி புலஎண்கள் அனைத்தும் வாதி பெயரில் பதிவாகியுள்ளது.

2. நான் ஏகணிவயல் கிராமத்தில் 4 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். வழக்கு தாக்கல் செய்யப்படும் போதும் நான் ஏகணிவயல் கிராமத்தில் தான் பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பார்வையிட்டேன். தாவா சொத்தை நான் எத்தனை முறை பார்வையிட்டேன் என்றால் பிரச்சனைக்கு பிறகு 4, 5 முறை பார்த்து இருக்கிறேன் எந்த வருடம் பார்த்தேன் என்றால் பிரச்சனை நடந்தது 2019 அப்போதும் அதன் பிறகும் சமீபத்திலும் 2022, 2023 வருடங்களில் பார்த்து இருக்கிறேன். எதனால் 2022, 2023 வருடங்களில் பார்த்தேன் என்றால் ஏற்கனெவே மக்கள் நீதிமன்றத்திற்காக வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து தகவல் கேட்கும் போதும் இதே வழக்குகாக முந்தைய விசாரணைக்காக வரும்போதும் பார்வையிட்டு வருவேன்- நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் தாவா சொத்தை நான் 2019 ம் ஆண்டிற்கு பிறகு எந்த காலகட்டத்திலும் இடப்பார்வை செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தின் புறத்தோற்றம் குறித்து என்னால் சொல்ல முடியும் தாவா சொத்தில் என்ன இருக்கிறது என்றால் புலஎண்.199/4A க்கு வடக்கு பக்கம் ரோடு போகிறது. அதற்கு வலது பக்கம் ஆரோக்கியசாமி வீட்டின் அவருடைய மூத்த மகனும் மருமகளும் இருக்கிறார்கள். மேலும் தாவா சொத்தில் அறந்தாங்கி கட்டுமாவடி சாலையில் இருந்து வடக்கு நோக்கி ஏற்கனெவே மண் சாலையாக இருந்தது. தற்போது செங்கல் கப்பி சாலை அமைப்பதற்காக பொருள்களை கொண்டு வந்து இறக்கி இருக்கிறார்கள். ஆரோக்கியசாமி 2019 ல் பொருளை இறங்கயிதற்காக தான் பிரச்சனை செய்தார். நான் சொல்வது போல் சாலை என்பதே இல்லை என்றால் சரியல்ல. ஊராட்சியில் அந்த சாலை பற்றி யூனியன் ரோடு ரிஜிஸ்டரில் ரைஸ்மில் சாலை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கான ஆவணம் தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் நான் தற்போது கைவசம் ரோடு ரிஜஸ்டர் ஆவணம் வைத்து இருக்கிறேன். சாட்சி தன்னிச்சையாக அந்த சாலை வழியாக தான் ஆரோக்கியமாதா தேர்பவணி செல்கிறது என்று கூறுகிறார்.

4. தாவா சொத்துக்கு கிழக்கு சமுதாய கூடம் இருக்கிறது என்றால் கிராம சேவை கட்டிடம் இருக்கிறது அதற்கான இடத்தை வாதிதான் ஊராட்சிக்கு கொடுத்தார் என்றால் ஆமாம் சாட்சி பின்னிட்டு ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும் என்று கூறுகிறார். வழக்கில் கண்ட புலஎண்களில் அரசுக்கு சொந்தமான சொத்து இருக்கிறதா என்றால் இல்லை. புலஎண்.205 என்பது அறந்தாங்கி கட்டுமாவடி சாலை என்றால் சரிதான். அந்த சாலை வழியாக தான் ஏகணிவயல் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் சென்று வருகிறார்கள் என்றால் அந்த சாலை கிழக்கு மேற்காக போகிறது அதிலிருந்து வடக்கு முகமாக மேற்சொன்ன ரைஸ்மில் சாலை போகிறது அந்த ரைஸ்மில் சாலை வழியாக தான் திருவங்கூர் ராயன் வயல் கிராம மக்கள் விவசாய பணிகளுக்கான வாகனங்கள் கொண்டு செல்வார்கள். புலஎண்.199/4A ல் சாலை எடுக்க முயற்சித்தோமா என்றால் 199/4A என்பது கணக்கின் 1 ஏர்ஸ் ஆக இருக்கிறது. புலவரைபடத்தில் 1.6 ஏர்ஸ் ஆக இருக்கிறது. கிராம மக்கள் சாலை மறியல் செய்ய தயாராக இருந்ததால் சட்ட ஒழுங்கு பிரச்சினை தவிர்ப்பதற்காக முள் பத்தையை அகற்றினோம். நான் மேற்சொன்ன விஸ்தீர்ண வேறுபாடு குறித்து அளவை செய்து பார்த்தோமா என்றால் இல்லை கணக்கீடு படி சொல்கிறேன்.

5. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் புலஎண்.199/4A ல் அளவை செய்யாமலேயே கூடுதல் விஸ்தீரணத்தில் தான் சாலை செல்கிறது என்று கணக்கீடு வைத்து சொல்லிருக்கிறேன் என்றால் சரிதான். ஏகணிவயல் கிராமத்திற்கு 2018 - 2019 ஆண்டின் ஏகணிவயல் கிராமத்திற்கு தார் சாலை அமைத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த சாலை நெருக்கடியாக குறுகலான சாலை ஆகும். நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும் ஏகணிவயல் கிராமத்தில் இருந்து திருவங்கூர், ராயன்வயல் கிராமத்தினர் அந்த சாலையை தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. புலவரைபடத்தில்

புலஎண்.199/4A யை சாலை என்று வகைப்பாடு செய்துள்ளோமா என்றால் இல்லை. சுமார் 100 வருடமாக பாதை பயன்பாட்டில் இருப்பதால் கவனிக்கவில்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் தார் சாலை இருப்பதால் அதை தான் பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

6. நான் சொல்லும் ரைஸ்மில் சாலை குறித்து வேறு பொதுமக்கள் யாரும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்று தெரியுமா என்றால் தெரியாது. தார் சாலை இருப்பதால் நான் சொல்லும் ரைஸ்மில் சாலையை பொதுமக்கள் பயன்படுத்த வில்லை என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட காரணங்களுக்காக வழக்கை எதிர்கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதி வரை வாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் இருக்கிறது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா படி வாதிக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**